*2*

# நாம் ஏன் தேவனை சேவிக்கின்றோம்?

## (யோபு 4–12)

*நமது சிரமங்கள் என்பவை பாவத்திற்குத் தண்டனையாக இருக்கின்றனவா? யோபு தேவனுக்கு உண்மையுள்ளவராய் இருக்கத் தவறியதுதான் யோபுவின் சிரமங்களுக்குக் காரணமாயிற்றென்று யோபுவின் மூன்று நண்பர்களும் நம்பினர். யோபு அனுபவித்துக்கொண் டிருந்தது போன்ற துன்பமானது, அன்புகூருகின்ற மற்றும் பரிசுத்தமான ஒரு தேவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட வாழ்வுடன் சீர்பொருந்தியிருப் பதில்லை என்று அவர்கள் நினைத்தனர். யோபு தேவனுக்கு முழுமையும் உண்மையுள்ளவராக இருந்திருந்தால், தேவன் யோபுவின் மீது இப்படிப் பட்ட சிரமத்தை அனுமதித்திருக்க மாட்டார் என்று அவர்கள் நம்பினர்.*

### யோபுவின் "நண்பர்களுடைய" ஆலோசனை

***எலிப்பாஸின் புத்திமதியும் யோபுவின் பதிலும் (4-7)***

*மற்றவர்கள் சிரமத்தில் இருந்தபோது தாம் கொடுத்திருந்த அதே அறிவுரையை யோபு பின்பற்றக் கூடாதிருந்தபடியால் எலிப்பாஸ் அவரைக் கடிந்து கொண்டார் (4:3-6). பின்பு அவர் யோபுவினிடத்தில் "குற்றமில்லாமல் அழிந்தவன் உண்டோ? சன்மார்க்கர் அதம் பண்ணப் பட்டது எப்போ? இதை நினைத்துப் பாரும்" (4:7) "நான் கண்டிருக்கிறபடி, அநியாயத்தை உழுது, தீவினையை விதைத்தவர்கள், அதையே அறுக்கிறார்கள்" (4:8) என்றார்.*

*இவ்விஷயங்கள் நடைபெற்றிருந்தது ஏன் என்று யோபு இன்னமும் புரிந்து கொள்ளவில்லை, ஏனெனில் அவர், எலிப்பாஸ் விவரித்திருந்த வாழ்வை தாம் வாழ்ந்திருந்ததாக நினைக்கவில்லை. அதிகாரங்கள் 6 மற்றும் 7ல் அவர் இன்னமும் இறந்துபோகவே விரும்பினார். எலிப்பாஸ் புரிந்துகொண்டார் என்றும்கூட அவர் நினைக்கவில்லை (6:15). அவர் தமது நண்பர்களிடத்தில் தாம் புரிந்துகொள்ள உதவும்படிக் கெஞ்சினார். அவர் தாம் தவறு ஏதேனும் கொண்டிருந்தால், அப்படி தவறு செய்தது எதில் என்று காண்பிக்கும்படி தமது நண்பர்களுக்கு அறைகூவல் விடுத்தார் (6:24). வார்த்தைகள் எதையும் நிறைவேற்றவில்லை. யோபுவின் நண்பர்கள் அவரது*

*துன்பங்களை விடுவிக்கவோ அல்லது அவரது வேதனையைக் குறைக்கவோ முடியாது தவறியிருந்தனர். அவர் சொப்பனங்களால் தம்மைப் பயமுறுத்துவதற்கு செய்யப்பட்ட எலிப்பாஸின் முயற்சியை திருப்பித் தாக்கினார் (7:14). எலிப்பாஸ் தம்மிடத்தில் ஒரு ஆவி, "மனுஷன் தேவனைப்பார்க்கிலும் நீதிமானாயிருப்பானோ? மனுபுத்திரன் தன்னை உண்டாக்கினவரைப்பார்க்கிலும் சுத்தமாயிருப்பானோ?" என்று கூறிய பயமுறுத்தும் கனவு ஒன்றைக் கூறியிருந்தார் (4:17). யோபு அதினால் மனம் கவரப்படாதிருந்தார். அவர் தாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று அறிந்திருந்த அளவுக்குத் தேவனுக்குத் தம்மை ஒப்புக்கொடுத்திருந்தார். தேவன் ஏன் அவருடைய மீறுதல்களை மன்னித்து - அதுவே பிரச்சனையாக இருந்திருந்தால் - அவருடைய அக்கிரமத்தை நீக்காமல் இருக்கிறது ஏன் என்று அறிய விரும்பினார் (7:21).*

***பில்தாதின் அறிவுரையும் யோபுவின் பதிலும் (8-10)***

*பில்தாத் என்பவரும் உதவி செய்ய வகையற்றவராகவே இருந்தார். அவரும்கூட, யோபுவின் பிரச்சனைகள் பாவத்திற்குத் தண்டனையாக இருந்தன என்றே யூகித்தார். யோபு உண்மையிலேயே நீதிமானாயிருந்தால், அவர் அழைத்தபோது தேவன் செவிகொடுத்திருப்பார் என்று கருத்துத் தெரிவித்தார். தேவன் யோபுவுக்குப் பதில் கொடுக்கவில்லை என்ற உண்மையானது, தேவன் யோபுவிடத்திலிருந்து திரும்பிக்கொள்ளும் அளவுக்கு யோபு ஏதோ சிலவற்றைச் செய்திருக்க வேண்டும் என்பது பில்தாதுக்கு ஆதாரமாயிருந்தது. யோபு தேவனை மறந்துபோயிருக்க வேண்டும் என்று அவர் கருத்துத் தெரிவித்தார் (8:13). அவர், "இதோ, தேவன் உத்தமனை வெறுக்கிறதுமில்லை, பொல்லாதவர்களுக்கு கைகொடுக்கிறதுமில்லை" என்று கூறினார் (8:20). பில்தாதின் கூற்றுப்படி, யோபு பூரணத்துவத்தில் இருந்து ஏதோ ஒருவகையில் குறைவுபட்டிருக்க வேண்டும், இல்லையென்றால் இவைகள் நடந்திருக்காது. அவர் யோபுவைத் தேவனிடத்தில் நம்பிக்கை வைக்கும்படி வற்புறுத்தினார். தேவனை மறந்து வேறுசிலவற்றின்மீது நம்பிக்கை வைக்கிற யாவரும் சிலந்திப்பூச்சியின் கூட்டைப் போல் இருக்கின்றனர் என்று அவர் கூறினார் (8:14, 15).*

*யோபு தேவனுடைய வல்லமையை இறந்து வேண்ட இயலாத அளவுக்கு மிகவும் பயங்கரமானதாகக் கண்டார். தேவன் தமது எல்லா மகத்துவத்திலும், வெறும் மனிதரின் பிரச்சனைகளைக் கண்ணோக்க வேண்டியது என்ன? யோபுவின் மதிப்பீட்டில், அவர் பூரணமானவராக இருந்தாலும், தேவனுடைய கவனத்தைப் பெற அவர் தகுதியற்றவராகவே இருப்பார். எந்த மனிதரும் தேவனுடைய பார்வையில் உண்மையில் நல்லவராக இருக்க இயலாது என்பதை அவர் உணர்ந்தறிந்தார். தேவனுடைய மகத்துவம் பற்றிய பில்தாதின் விவரிப்பானது வேதவசனங்களில் செம்மையான பொருளுரைக்கும் பகுதிகளில் ஒன்றாக உள்ளது (8:2-22).*

*இன்னமும் யோபு குழப்பத்திலேயே இருந்தார் (10:15). அவர் பூரணத்துவமானவராக இருந்ததில்லை - அவரே அதை அறிந்திருந்தார் -*

*ஆனால் அவரது நண்பர்கள் அவர்மீது குற்றம்சாட்டிய வகையிலான துன்மார்க்கத்தினால் அவர் குற்றப்பட்டிருந்ததில்லை.*

***சோப்பாரின் குற்றச்சாட்டும் யோபுவின் பதிலும் (11; 12)***

*சோப்பார் என்பவர் மற்ற இரண்டு நண்பர்கள் சுமத்திய குற்றச்சாட்டைவிடத் தமது குற்றச்சாட்டுகளில் மிகவும் கொடியவராய் இருந்தார். "வாய்ச்சாலகன் நீதிமானாய் விளங்குவானோ?," "நீர் பரியாசம் பண்ணும்போது, ஒருவரும் உம்மை வெட்கப்படுத்த வேண்டாமோ?" என்று அவர் கேட்டார். தேவன் பேசவேண்டும் என்றும் அவர் யோபு தமது பாவம் நிறைந்த தன்மையை காணச்செய்ய வேண்டும் என்றும் அவர் விரும்பினார். அவர், யோபுவின் அக்கிரமத்திற்கேற்றபடி தண்டியாமல் அவரைத் தேவன் குறைவாகவே தண்டித்திருந்தார் என்று கூறினார் (11:6)! தேவன் சர்வவல்லவராய் இருக்கின்றார் - தேடிப் பார்ப்பதினால் மட்டும் கண்டறியப்படக்கூடாத அளவுக்கு அவர் மிகவும் பெரியவராய் இருக்கின்றார் - என்று அவர் உறுதிப்படுத்தினார். அவ்வளவு பெரியவராய் இருக்கின்ற தேவன் தாம் செய்கிறது இன்னதென்று அறிந்தவராய் இருக்க வேண்டும். அவர் ஒரு மனிதனைத் துன்புறுத்தினால், அதற்கு ஒரு நல்ல காரணம் இருக்க வேண்டும். யோபு தேவனிடத்திற்குத் திரும்பினால், அவர் (யோபு) தமது எல்லாத் துன்பத்தில் இருந்தும் விடுவிக்கப்படுவார் என்று அவர் (சோப்பார்) வலியுறுத்தினார்.*

*சோப்பாருக்கு யோபுவின் பதிலானது சுடுசொல்லைச் சுட்டிக் காண்பித்தது: "ஆம், நீங்களே ஞானமுள்ள ஜனங்கள்; உங்களுடனே ஞானம் சாகும்!" (12:2). யோபு ஒரு சில விஷயங்களையும்கூட அறிந்திருந் தார். அவரது ஞானம் அவர்களுடைய ஞானத்திலும் தாழ்ந்ததாக இருந்த தில்லை. அவர்கள் கூறுவதில் சில உண்மைகள் இருந்தன என்று அவர் அறிந்தார், ஆனால் அவர்கள் தம்மைக் கடிந்து கொண்டதில் நியாயமாயிருந் தனர் என்று அவர் நம்பாதிருந்தார். அவர் தம்மை, ஏளனம் பண்ணப்பட்ட மற்றும் தரக்குறைவாக இகழப்பட்ட ஒரு நீதியான நேர்மையான மனிதர் என்று கருதினார்.*

*இந்த நண்பர்கள் யோபுவினிடத்தில், தேவனைப் பற்றி அவர் ஏற்கனவே அறிந்திராத எதையும் கூறியிருக்கவில்லை. மிருகங்களும், பறவைகளும் மற்றும் மீன்களும்கூட தேவனைப் பற்றி யோபுவின் நண்பர்களுக்குப் போதிக்க முடியும் என்று யோபு கூறினார்: "... கர்த்தருடைய கரம் இதைச் செய்ததென்று இவைகள் எல்லாவற்றினாலும் அறியாதவன் யார்? சகல பிராணிகளின் ஜீவனும், மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கையிலிருக்கிறது" (12:7-10). எல்லாம் தேவனுடைய கரங்களில் இருந்தன என்று யோபு ஒப்புக்கொண்டார், ஆனால் அது அவர் ஏன் துன்புற்றார் என்பதன் இரகசியத்தை அவருக்கு வெளிப்படுத்தியிருக்கவில்லை.*

# தண்டனை என்ற வகையில் துன்புறுதல் பற்றிய கேள்வி

*யோபுவின் மூன்று நண்பர்களும் (தங்கள் கூற்றுகளில்) சரியானவர்களாய் இருந்தனரா? அவர் தாம் தவறு செய்ததினால் துன்புற்றுக் கொண்டிருந்தாரா? அப்படிப்பட்ட கடுமையான தண்டனையானது பாவத்திற்கென்று நமக்குத் தரப்படுகின்றதா? அப்படியென்றால், துன்மார்க்கர் ஏன் நீதிமானைக் காட்டிலும் அதிகமாகத் துன்புறுவதில்லை?*

*ஒரு கருத்தில், துன்புறுதல் யாவும் பாவத்தின் விளைவாகவே உள்ளது. பாவம் என்பதே மனித குலத்தின் பிரச்சனையாக உள்ளது. ஆதாமும் ஏவாளும் தங்களுடைய பாவத்தின் விளைவாகக் கணிசமான அளவுக்குத் துன்பத்தை அனுபவித்தனர் (ஆதி. 3). ஆனால் அது, குறிப்பிட்ட நமது கடினவேளைகள் மற்றும் துன்புறுதலின் வேளைகள் நாம் செய்துள்ள குறிப்பிட்ட பாவங்களினால் வருகின்றன என்று அர்த்தப்படுத்துவதில்லை.*

*சிலவேளைகளில் நாமே நம்மீது இடர்ப்பாடுகளைக் கொண்டு வருகின்றோம். தேவனுடைய பிரமாணங்கள் மீறப்படும்போது, விளைவுகள் துன்புறுத்தப்படுகின்றன. அது இயற்கையான மற்றும் ஆவிக்குரிய வட்டாரங்களில் உண்மையானதாகவே உள்ளது. புவியீர்ப்பு விசை போன்ற தேவனுடைய இயற்கையான விதிகளை நாம் உணர்ந்தறிகின்றோம். புவியீர்ப்பு விசையின் விதியை மீறுகின்றவர்கள் துன்புறுவார்கள். நெருப்பு மற்றும் நீர் ஆகியவற்றை ஆளுகின்ற தேவனுடைய விதிகளை நாம் மதிக்கின்றோம் - அல்லது அதன் விளைவுகளினால் துன்புறுகின்றோம். யோனா தேவனுடைய கட்டளையில் இருந்து விலகி ஓடுவதற்கு முயற்சி செய்து தாமே தம்மீது இடர்ப்பாட்டைக் கொண்டுவந்தார் (யோனா. 1; 2). இஸ்ரவேலின் பாளையத்தில் இருந்த பாவத்தின் காரணமாக அவர்கள் ஆயி பட்டணத்தில் தோல்வியினால் துன்புற்றனர் (யோசு. 7:11, 12).*

*மற்ற வேளைகளில், இடர்ப்பாடுகள் என்பவை மற்றவர்களால் நமக்குக் கொண்டுவரப்படுகின்றன. ஆபேலின் மரணம் அவரது சகோதரரான காயீனின் பாவத்தினால் கொண்டுவரப்பட்டது (ஆதி. 4). அவர் சரியானதைச் செய்ததினால் துன்புற்றார். சிலவேளைகளில் நாம், "தேவனால் அப்படிப்பட்ட அநீதியான செயல்களைத் தடுக்க முடியாதா? அவர் ஏன் தடுப்பதில்லை?" என்று கேட்கின்றோம். மேலும் நாம், "அவர் ஏன் அதைச் செய்யவேண்டும்? அவர் அதைச் செய்திருந்தால் இனியும் நாம் அவரை உண்மையுடன் சேவிப்போமா? இனியும் நாம்அவரை அன்பு கூருவோமா?" என்றும் கேட்கலாம்.*

*விஷயங்கள் பற்றிய தேவனுடைய திட்டத்தில், மற்றவர்கள் உதவி பெற்றுக்கொள்ளும்படிக்கு நமக்கு இடர்ப்பாடுகள் வர அனுமதிக்கப்படலாம். தேவன் இஸ்ரவேல் மக்களினம் முழுவதற்கும் உதவி செய்யும்படிக்கு யோசேப்பு துன்புறுதலை அனுமதித்தார் (ஆதி. 37-50). நமக்கு உதவுவதற்காக இயேசு பாடுபட்டார். உண்மையில் தேவனுடைய மாபெரும் ஊழியக்காரர்கள் யாவரும் சிலவேளைகளில் மற்றவர்களின் நன்மைக்காகத் துன்புற்றுள்ளனர். சுவிசேஷத்தின் நிமித்தம் பவுல் பல*

*வேதனைகளில் உபத்திரவப்பட்டார் (2 கொரி. 4:7-18). பேதுரு, "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்" என்று கூறினார் (1 பேது. 4:16).*

*"கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து" (எபி. 12:6) என்றும், அவர் "தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்" என்றும் (எபி. 12:10) புதிய ஏற்பாடு போதிக்கிறது. அந்த வேளையில் அது சகிக்கக் கடினமாயிருக்கிறது, ஆனால் முடிவில் அது நீதியான பலனைக் கொடுக்கிறது. எலிப்பாஸ் "இதோ, தேவன் தண்டிக்கிற மனுஷன் பாக்கியவான். ஆகையால் சர்வவல்லவருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதிரும்" (5:17) என்று சரியாகவே கூறினார்.*

## இடர்ப்பாட்டின் உலகளாவிய தன்மை

*நம்மில் எவரும் இடர்ப்பாட்டிலிருந்து விதிவிலக்குப் பெற்றிருப்ப தில்லை. யோபுவேகூட, "ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்" என்று அறிவித்தார் (14:1). தேவன் நம்மை எல்லா இடர்ப்பாட்டிற்கும் மேலாக உயர்த்து வதில்லை, ஆனால் நாம் அதைத் தாக்குப் பிடிக்கக் கூடியவர்களாக்கு கின்றார். அவர் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமுள்ள ஆவியைக் கொடுக்கின்றார் (2 தீமோ. 1:7). அவர், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் நமக்கு வெற்றியை அளிக்கின்றார் (1 கொரி. 15:57). நம்மைப் பெலப்படுத்துகின்றவராலே நாம் எல்லாவற்றையும் செய்ய முடியும் (பிலி. 4:13).*

*தேவனை நாம் சேவித்தல் என்பது நம்மை இடர்ப்பாட்டில் இருந்து விடுவிக்காது. இது யோபுவின் மூன்று நண்பர்களுடைய விவாதத்தின் தவறான கருத்தாக இருந்தது. தேவனுக்கு உண்மையுடன் இருத்தல் என்பது, மக்கள் யோபு அனுபவித்தது போன்ற வகையிலான இடர்ப்பாட்டில் இருந்து விதிவிலக்குப் பெறச்செய்யும் என்று அவர்கள் நினைத்தனர். யோபு தேவனைத் தேடி, அவரிடத்தில் தமது வழக்கை எடுத்துரைத்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று எலிப்பாஸ் உரிமை கோரினார் (5:8, 17-27). தேவன் யோபுவை விடுவித்து, மரணத்திலிருந்து அவரை மீட்டு, அழிவு பற்றிய அவரது பயத்தை நீக்கிப்போடுவார் மற்றும் அவருக்குச் சமாதானத்தைக் கொண்டுவருவார் என்று அவர் (எலிப்பாஸ்) யோபுவுக்கு உறுதியளித்தார். அவர் தாம் பூரணவயதுள்ளவராக, அறுப்புக்காலம் வரை காத்திருக்கும் தானியத்தைப் போல முதிர்ந்த வயதில் தமது கல்லறைக்குச் செல்லுவார் என்று அவர் வாக்குறுதியளித்தார்.*

*சோப்பார் இதேபோன்றதொரு ஆசீர்வாதம் நீதிமான்களின்மீது இருக்கும் என்று உரிமைகோரினார் (11:15-19). யோபுவின் நண்பர்கள் அவருக்கு நடந்த யாவற்றையும் தவறாக விளக்கப்படுத்தினர், யோபுவும் அதை அறிந்திருந்தார். நீதிமானாக உள்ள மனிதர்களும்கூடத் துன்புறுவார்கள் என்று யோபு அறிந்திருந்தார்.*

*உண்மையில், நாம் நீதிமான்களாய் இருப்பதாலேயே அடிக்கடி துன்புறுகின்றோம். யோபு தவறு செய்தார் என்பதால் அல்ல, ஆனால் அவர் நேர்மையாளராக இருந்தார் என்பதாலேயே அவருக்குத் துன்பம் வந்தது. துன்புறுதல் சிலவற்றில் சாத்தான் தனது கரத்தைக் கொண்டுள்ளான். அவன் யோபுவைத் தேவனிடத்தில் இருந்து புறம்பே இழுத்துப்போடலாம் என்று நம்பி அவரைத் துன்புறுத்துவதைக் குறிப்பாகத் தேர்ந்துகொண்டான். துன்புற்றவர்கள் நன்மை செய்ததால் அவர்களைப் பேதுரு உற்சாகப்படுத் தினார்: "நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினாலே என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன் பாகப் பிரீதியாயிருக்கும்" (1 பேது. 2:20). தேவனுக்கு உண்மையுடன் இருத்தல் என்பது, "அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே" தேர்ந்துகொண்ட (எபி. 11:25) மோசேக்கு துன்பத்தைக் கொண்டுவந்தது. எண்ணற்ற தீர்க்கதரிசிகளும் பிரசங்கியார்களும் சரியானதைச் செய்வதைத் தேர்ந்து கொண்ட காரணத்தினால் துன்புற்றுள்ளனர்.*

## தேவனை சேவிப்பதற்கான காரணம்

*யோபுவின் புத்தகம் "தேவனை சேவிப்பது ஏன்?" என்ற கேள்விக்குப் பதிலை நாடுவதாக உள்ளது. யோபுவைத் தேவன் ஆசீர்வதித்திருந்ததால் அவர் தேவனை சேவித்தார் என்று சாத்தான் நினைத்தான். தேவனோ, தம்மிடத்தில் யோபு தன்னை ஒப்புக்கொடுத்திருந்தபடியால் அவரை சேவித்தார் என்று நிரூபிக்க விரும்பினார்.*

*யோபுவின் புத்தகம் "நீதிமானாக இருப்பது ஏன்?" என்ற கேள்வியைப் பற்றிய படிப்பாக உள்ளதற்கும் அதிகமாக, அது "நீதிமான் துன்புறுவது ஏன்?" என்ற கேள்வியைப் பற்றிய படிப்பாக இருப்பதில்லை. நாம் தேவன்மீது அன்புகூர்ந்து அவருக்கு ஒப்புக்கொடுத்தலுடன் இருப்பதாலா அல்லது நாம் பெற்றுக்கொள்கின்ற ஆசீர்வாதத்தினாலா, எதனால் நாம் தேவனை சேவிக்கின்றோம்? இடர்ப்பாட்டில் இருந்து அவர் நம்மை விடுவிப்பார் என்ற எதிர்பார்ப்புடன் நாம் அவரை சேவித்தால், நாம் மதிமயக்கப்பட்டவர்களாயிருப்போம். சோதனையில் இருந்து தப்பிப்பதற் காகத் தேவனை சேவித்தல் என்பது, பயிற்சியைத் தவிர்ப்பதற்காக ஒரு மாரத்தான் பந்தயத்தில் நுழைவது போன்றதாக உள்ளது. மாரத்தான் பந்தயத்திற்கு ஒரு ஓட்டப்பந்தயவீரர் பதிவு செய்கின்றபோது, அவர் கடினமான பயிற்சியையோ அல்லது ஓடும் பழக்கத்தையோ எதிர்பார்த்தே அதைச்செய்கின்றார், பந்தயத்தின் பெருந்துன்பம் பற்றிப் பேசவேண்டியதே இல்லை.*

*நாம் தவறான கேள்வியைக் கேட்கின்றோம். "மக்கள் ஏன் துன்புறு கின்றனர்?" என்பது வாழ்வின் கேள்வியல்ல. எல்லா மக்களும் துன்புறுகின்றனர். சோதனைகள் தவிர்க்க இயலாதவைகளாக உள்ளன. அவைகள் நமக்கு என்ன செய்கின்றன என்பது அவற்றைப் பற்றிய நமது*

எண்ணப்போக்கைப் பொறுத்ததாக உள்ளது. சூரியன் ஒவ்வொருவர் மீதும் பிரகாசிக்கிறது. அது ஒருவரை நிறம் மாற்றி இன்னொருவர்மீது கொப் புளத்தை ஏற்படுத்துகிறது, இது அந்த இரு தனிநபர்களின் தோலினுடைய தன்மையைப் பொறுத்து ஏற்படுகிறது. அதுபோலவே, இடர்ப்பாட்டுக்கு நாம் எவ்வாறு தாக்குப்பிடிக்கின்றோம் என்பது நாம் அதை எவ்வளவு பெறுகின்றோம் என்பதைப் பொறுத்ததாயிராமல், நமது வாழ்வின் வடிவமைப்பைப் பொறுத்ததாக உள்ளது.

தேவன் நமது சோதனைகளில் நமக்கு உதவுகின்றார், ஆனால் அவர் அவற்றை நம்மிடத்தில் இருந்து நீக்கிப்போடுவதில்லை. உண்மையில், நாம் தேவனை சேவிக்கின்றபோது நாம் சோதனைகளை ஒரு மாறுபட்ட வகையில்கூட மேற்கொள்பவர்கள் ஆவோம். நாம் இடர்ப்பாட்டைக் கண்ணோக்கும் வழியைத் தேவன் மாற்ற முடியும். அவர், சூழ்நிலைகள் நம்மைக் கட்டுப்படுத்துவதற்கு மாறாக நாம் சூழ்நிலைகளைக் கட்டுப் படுத்துவதற்கு நமக்கு உதவக்கூடும்.

தேவன் நமக்காக என்ன செய்கின்றார் என்பதினிமித்தமல்ல, ஆனால் அவர் யாராக இருக்கின்றார் என்பதின் நிமித்தமாக நாம் அவரை அன்பு கூரவும் சேவிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். தேவனை சேவித்தல் என்பது பலன்களையும் ஆசீர்வாதங்களையும் கொண்டுள்ளது; ஆனால் அதின்மூலம் நாம் பெற்றுக்கொள்வதற்காக மாத்திரம் நாம் அவரை சேவித்தால், ஒரு ஆசீர்வாதத்தைக் காணும்போது நாம் அதை உணர்ந்தரிய மாட்டோம். எடுத்துக்காட்டாக, “வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக் கிறதே பாக்கியம்” என்று இயேசு கூறினார் (அப். 20:35). நாம் பெறுவதற்காக மாத்திரம் சேவிப்பவர்களாய் இருந்தால், நாம் கொடுத்தலில் உள்ள ஆசீர்வாதத்தை அறிய இயலாது. நாம் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தல் உள்ளவர்களாய் இருப்பதினால் தேவனை நாம் சேவிக்கின்றபோது, கடினமான வேளையிலும்கூட நாம் அவரது ஆசீர்வாதங்களைக் காண முடியும்.

## முடிவுரை

நாம் நன்மையைப் பெறுவதற்காக அல்ல ஆனால் நன்மை செய்வதற்காகத் தேவனை சேவிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் நன்மை செய்யப்படுவதற்கல்ல ஆனால் நல்லவர்களாய் இருப்பதற்கே விரும்ப வேண்டும். சோதனையில் வெற்றியைக் கண்டறிதல், தடைகளை வெற்றிகொள்ளுதல், பெருந்துயரின் கண்ணீர்கள் மூலமாக இன்னொரு வருக்கு, அவரது கண்ணீர் உலர்ந்து மேகங்களினூடாக நம்பிக்கை உதயமாகும் வரையிலும் அவருடன் சேர்ந்து அழுதல் மற்றும் புண்படுதல் ஆகியவற்றிலுள்ள சந்தோஷங்களே தேவபக்தியுள்ள வாழ்வின் சந்தோஷங்களாக உள்ளன.